PRAYERS OF THE FAITHFUL

32nd Sunday in Ordinary Time – 8 November 2026

Dear brothers and sisters, trusting in the Lord who calls us to remain vigilant and keep the lamps of our faith burning, let us bring our prayers and intentions before him, confident that he hears us and leads us towards the joy of his eternal kingdom.

1. For Pope Leo, our bishops, priests, and religious: that they may remain faithful and vigilant servants of the Gospel, keeping the light of Christ alive in the hearts of the people entrusted to their care. Let us pray to the Lord.
Lord, hear our prayer.

2. That they may be guided by God's wisdom in their decisions, work tirelessly for peace and justice, and bring hope to those who live in poverty, conflict, and uncertainty. Let us pray to the Lord. **Lord, hear our prayer.**

3. That we may never allow the oil of faith, hope, and charity to run dry, but remain steadfast in prayer, generous in love, ready to forgive, and prepared to welcome the Lord whenever he comes. Let us pray to the Lord.
Lord, hear our prayer.

4. That those burdened by grief, loneliness, disappointment, or uncertainty may find strength in Christ, the light who never fades, and discover renewed hope through the love and support of others. Let us pray to the Lord.
Lord, hear our prayer.

5. That the sick may receive healing, comfort, and strength through Christ, our divine healer; and that our departed brothers and sisters, especially those who have died in the hope of the resurrection, may be welcomed by the Bridegroom into the eternal wedding feast of heaven, where they will remain with the Lord forever. Let us pray to the Lord. **Lord, hear our prayer.**

Heavenly Father, you are the source of our hope and the light that never grows dim. Hear the prayers we place before you. Keep the lamps of our faith burning through every trial and delay, and prepare us to meet your Son with hearts filled with love and trust. We ask this through Christ our Lord. Amen.

FÜRBITTEN
32. Sonntag im Jahreskreis – 8. November 2026

Liebe Schwestern und Brüder, im Vertrauen auf den Herrn, der uns auffordert, wachsam zu bleiben und das Licht unseres Glaubens brennen zu lassen, wollen wir unsere Bitten vor ihn tragen. Voll Zuversicht vertrauen wir darauf, dass er uns erhört und uns zur Freude seines ewigen Reiches führt.

1. Für Papst Leo, unsere Bischöfe, Priester und Ordensleute: dass sie treue und wachsame Diener des Evangeliums bleiben und das Licht Christi in den Herzen der Menschen, die ihnen anvertraut sind, lebendig erhalten. Wir bitten den Herrn. **Herr, erhöre unser Gebet.**

2. Für die Verantwortlichen in Politik und Gesellschaft: Dass sie sich bei ihren Entscheidungen von der Weisheit Gottes leiten lassen, sich unermüdlich für Frieden und Gerechtigkeit einsetzen und den Menschen Hoffnung schenken, die in Armut, Konflikten und Unsicherheit leben. Wir bitten den Herrn. **Herr, erhöre unser Gebet.**

3. Für alle Christen: Dass wir das Öl des Glaubens, der Hoffnung und der Liebe niemals ausgehen lassen, sondern im Gebet standhaft bleiben, großzügig lieben, zur Vergebung bereit sind und dem Herrn jederzeit entgegengehen. Wir bitten den Herrn. **Herr, erhöre unser Gebet.**

4. Für die Familien und alle Menschen, die schwere Zeiten durchleben: Dass alle, die unter Trauer, Einsamkeit, Enttäuschungen oder Unsicherheit leiden, in Christus, dem Licht, das niemals erlischt, Kraft und Trost finden und durch die Liebe und Unterstützung ihrer Mitmenschen neue Hoffnung schöpfen. Wir bitten den Herrn. **Herr, erhöre unser Gebet.**

5. Für die Kranken und die Verstorbenen: Dass die Kranken durch Christus, unseren göttlichen Heiland, Heilung, Trost und Kraft erfahren; und dass unsere verstorbenen Brüder und Schwestern, besonders jene, die in der Hoffnung auf die Auferstehung gestorben sind, vom Bräutigam in das ewige Hochzeitsmahl des Himmels aufgenommen werden, um für immer beim Herrn zu sein. Wir bitten den Herrn. **Herr, erhöre unser Gebet.**

Guter Vater, du bist die Quelle unserer Hoffnung und das Licht, das niemals erlischt. Erhöre die Bitten, die wir vor dich bringen. Lass die Lampen unseres Glaubens in allen Prüfungen und Zeiten des Wartens brennen und bereite uns darauf vor, deinem Sohn mit Herzen voller Liebe und Vertrauen entgegenzugehen. Darum bitten wir durch Christus, unseren Herrn. **Amen.**

இறைமக்களின் மன்றாட்டுகள்

பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு – 8 நவம்பர் 2026

அன்பான இறைமக்களே, நம் நம்பிக்கையின் விளக்குகளை அணையாமல் காத்து, விழிப்போடும் நம்பிக்கையோடும் வாழ அழைக்கும் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டு, நமது மன்றாட்டுகளை அவர்முன் சமர்ப்பிப்போம். நமது மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்து, தமது நிலைவாழ்வின் மகிழ்ச்சிக்கு நம்மை அழைத்துச் செல்வார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் மன்றாடுவோம்.

1. திருச்சபைக்காக: திருத்தந்தை லியோ, நமது ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் நற்செய்தியின் உண்மையுள்ள பணியாளர்களாகவும், விழிப்புடன் செயல்படுபவர்களாகவும் திகழ்ந்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களின் இதயங்களில் கிறிஸ்துவின் ஒளியை அணையாமல் காத்திட வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.
ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. உலகத் தலைவர்கள் மற்றும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்காக: அவர்கள் தங்களது முடிவுகளிலும் செயல்பாடுகளிலும் இறைவனின் ஞானத்தால் வழிநடத்தப்பட்டு, அமைதி மற்றும் நீதிக்காக அயராது உழைக்கவும், வறுமை, போர், மோதல் மற்றும் பாதுகாப்பற்ற சூழலில் வாழும் மக்களுக்கு நம்பிக்கையையும் வாழ்வாதாரத்தையும் வழங்கிடவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

3. அனைத்து கிறிஸ்தவர்களுக்காக: நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு என்னும் எண்ணெய் நம் உள்ளங்களில் ஒருபோதும் குறையாமல், இறைவேண்டலில் உறுதியாய் நிலைத்திருக்கவும், பிறரிடம் தாராளமாக அன்பு காட்டவும், மன்னிக்கத் தயாராக இருக்கவும், ஆண்டவரின் வருகையை எந்நேரமும் எதிர்கொள்ளும் விழிப்புள்ளவர்களாக வாழவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

4. குடும்பங்களுக்காகவும், வாழ்வில் துன்பங்களைச் சந்திப்பவர்களுக்காகவும்: துயரம், தனிமை, ஏமாற்றம் மற்றும் வாழ்க்கையின் நிச்சயமற்ற சூழல்களால் மனம் தளர்ந்திருப்போர் அனைவரும் ஒருபோதும் அணையாத ஒளியாகிய கிறிஸ்துவில் ஆறுதலையும் வலிமையையும் கண்டடையவும், பிறரின் அன்பு மற்றும் ஆதரவின் வழியாகப் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையைப் பெறவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

5. நோயாளிகளுக்காகவும், இறந்த விசுவாசிகளுக்காகவும்: நோயுற்றிருப்போர் அனைவரும் நமது தெய்வீக மருத்துவராகிய கிறிஸ்துவின் அருளால் நலமும், ஆறுதலும், மனவலிமையும் பெறவும்; உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் இவ்வுலக வாழ்வை முடித்த நமது சகோதர சகோதரிகள் அனைவரும், குறிப்பாக நம்மைவிட்டுப் பிரிந்த நம் அன்புக்குரியவர்கள், விண்ணக மணமகனாகிய கிறிஸ்துவின் நிலைவாழ்வுக்குரிய விருந்தில் பங்கேற்று, என்றும் அவரோடு பேரின்பத்தில் வாழும் பேறு பெறவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

அன்புத் தந்தையே, எங்கள் எதிர்நோக்கின் ஊற்றும், ஒருபோதும் அணையாத ஒளியுமாகிய இறைவா, நாங்கள் உம்முன் சமர்ப்பித்த மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும். வாழ்வின் அனைத்துச் சோதனைகளிலும், காத்திருக்கும் காலங்களிலும் எங்கள் நம்பிக்கை என்னும் விளக்கு அணையாமல் காத்தருளும். அன்பும் நம்பிக்கையும் நிறைந்த உள்ளத்தோடு உம் திருமகனை எதிர்கொள்ள எங்களைத் தயார்படுத்தியருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.